நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 127/2020
அரசு தரப்புக்காக அ. சா.1 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விமலா | தொழில்/பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 1 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on

24th day of June 2025.

**முதல் விசாரணை**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 04.47 )

நான் தற்போது கீழ்அனுவம்பட்டு என்ற கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பூ வியாபாரம் செய்கிறேன். வழக்கில் இறந்துபோன தவசுந்தரி எனது 2வது மகள். எனக்கு 4 மகள்கள். ஆஜர் எதிரி எனது 2வது மகள் தவசுந்தரியின் கணவர். 2018 ஆம் ஆண்டு நாங்கள் பெரியோர்கள் பார்த்து எனது மகள் தவசுந்தரியை எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தோம். திருமணத்தின் போது எனது மகள் தவசுந்தரிக்கு 7 பவுன் நகை போட்டோம். மாப்பிள்ளைக்கு FZ வண்டி வாங்கி கொடுத்தோம். அதன் விலை ஒரு லட்சத்து இருபதாயிரம். மற்றபடி பித்தளை சாமான், சில்வர் சாமான், கட்டில், பீரோ, மெத்தை, ஷோபா ஆகியவை கொடுத்தோம். எதிரி கொத்தனார் வேலை செய்கிறார். திருமணத்திற்கு பிறகு எனது மகள் நாட்டார்மங்கலத்தில் உள்ள எதிரியின் வீட்டில் வசித்தார். இரண்டு வருடங்களாக குடும்பம் நடத்தினார்கள். ஒருநாள் கூட எனது மகளுக்கு நிம்மதி இல்லை. அதனால் அவர்களை சண்டை போட்டு அனுப்பி அனுப்பி வைப்பேன். எதிரி குடித்து விட்டு எப்போதும் அடிப்பார் எனது மகள் அதை என்னிடம் சொல்லி அழுவார். இருப்பதை விட செத்துவிட்டால் தேவலாம் என்றும் இன்னும் சீர் வரிசை கேட்கிறார்கள் என்றும் டெய்லி அடிக்கிறார்கள் என்றும் எனது மகள் என்னிடம் சொன்னார். பிறகு பூ வியாபாரம் செய்யும்போது என்னிடம் போன் போட்டு வர சொன்னார். 2020 ஆம் ஆண்டு கொரோனா

டைமில் வர சொன்னார். 04.06.2020 கிழமை தெரியவில்லை. காலை 08.00 மணிக்கு போன் செய்து என்னை சண்டை போடுகிறார்கள் என்றும் என்னை வந்து அழைத்து செல் என்றும் சொன்னார். நான் செத்துவிடுவேன் போல் இருக்கிறது. என்னை அடிக்கிறார்கள் உதைக்கிறார்கள் என்று சொன்னார். அன்றே மதியம் 03.00 மணிக்கு வா மா அர்ஜெண்ட்டா சித்திரவதை செய்கிறார்கள் என்று கூப்பிட்டார். நான் பூ எடுத்துக்கொண்டு வியாபாரத்திற்கு போய்விட்டேன். நாளைக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டேன். அன்றே மாலை 05.00 மணிக்கு எனது கொழுந்தனார் பாரதிதாசன் என்பவர் போன் செய்து தவசுந்தரி ஆஸ்பித்திரியில் இருப்பதாகவும் பாலமுருகன் என்பவர் போன் செய்து சொன்னதாகவும் சொன்னார். நானும் உடனே சிதம்பரத்திற்கு வந்துவிட்டேன். காட்டுமன்னார்கோவில் ஜிஎச்சிற்கு ஆட்டோவில் போய் எனது மகளை பார்த்தேன். எனது மகள் இறந்துகிடந்தார். டாக்டர் மட்டும் இருந்தார். வேறு யாரும் பக்கத்தில் இல்லை. எப்படி இறந்தது என்று டாக்டரிடன் கேட்டபோது போஸ்ட் மார்டம் முடிந்த பிறகு தான் தெரியும் என்று சொன்னார். எனது மகளின் உடம்பில் நைட்டி இருந்தது அது ஈரமாக இருந்தது. கழுத்தில் அழுத்திய தடம் இருந்தது. அதற்குபிறகு காட்டுமன்னார் கோவில் காவல்நிலையத்தில் நான் போய் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார் தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகாரை நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். (அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள். சிதம்பரம் கலெக்டர் ஆபிசில் இருந்தவர்கள் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் காட்டுமன்னார்கோவில் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை கார்த்தி என்ற வழக்கறிஞர் எழுதினாரா என்றால் ஆமாம். நான் சொல்ல சொல்ல எழுதினார். எனது மகள் என்னிடம் தனது கணவர் அடிப்பதாக அடிக்கடி சொன்னது குறித்து போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. குடும்ப பிரச்சனை என்பதால் கண்டித்து அனுப்பி வைத்தேன். எனது மகள் என்னிடம் வந்து எதுவும் தன் கணவர் அடித்ததாக சொல்லவில்லை என்பதால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. திருமணம் நடந்த ஒன்றரை வருடம் எனது மகள் கணவர் வீட்டில்தான் வாழ்ந்தார் என்றால் சரிதான். 10 நாட்கள் அங்கு இருப்பார்கள். 20 நாட்கள் எனது வீட்டில் இருப்பார் சமாதானம் செய்து அனுப்பி வைப்பேன். சிதம்பரம் சப் கலெக்டர் ஆபிசர் விசாரித்தபோது எனது மகள் எப்படி இறந்தார்ள ன்பது தெரியவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சந்தேகத்தின் பேரில் சொல்லியுள்ளேன். கீழ்அனுவம்பட்டு என்ற ஊரில் இருந்து காட்டுமன்னார் கோவில் காவல்நிலையம் எவ்வளவு துரம் என்று சொன்னால் 20 கி.மீ இருக்கும். காட்டுமன்னார் கோவில் அரசு மருத்துவமனை 20 கி.மீ

இருக்கும் என்றால் சரிதான். நான் இரவு 08.00 மணிக்கு தான் காட்டுமன்னார்கோவில் அரசு மருத்துவமனைக்கு வந்தேன் என்று சொன்னால் சரிதான். பாலமுருகன் என்பவர் எனது கொழுந்தனார் பாரதிதாசனுக்கு எத்தனை மணிக்கு போன் செய்தார் என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மகள் சம்பவ நடப்பதற்கு முதல்நாள் இரவு 09.00 மணிக்கு போன் செய்தாரா என்றால் இல்லை. சப் கலெக்டர் விசாரித்தபோது பிரேம்குமார் வரதட்சணை கேட்டு எனது மகளை கொடுமைப்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது மகள் வயிற்றுவலி காரணமாக தானாக தற்கொலை செய்துகொண்டார் என்றும் அதனால் தான் சப்கலெக்டர் விசாரணையில் எனது மகள் இறப்பு எப்படி ஏற்பட்டது என்று தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகள் 04.11.2020 மாலை 03.00 மணிக்கு போன் செய்து அர்ஜெண்டாக வர சொன்னதை குறித்து உறவினர்களிடமோ போலிசிடமோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரி எனது மகளை நல்ல முறையில் தான் பார்த்துக்கொண்டு இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 05.16)

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.